## அன்பின்சீர் முகமது சாபுதீன்
## நினைவைப் போற்றுவோம்!



அங்கமாம் காவிரிக்ரை பிறந்து, வளர்ந்து;
வங்கக் கடலோரம் வாழ்க்கைப் பயணம் ஆகி,
சுங்கத்துறை தனிலே என்றன் பணி தொடர,
தங்கத் தமிழ்கொஞ்சும் தாமிரபரணி மண்ணின்,

அங்கமாய்ப் பிறந்த மக்கள்சிலர் அணைந்திட,
எங்களின் பணியூடே இணைந்து பயணித்தோம்!
அங்கந்த மண்ணின் சீலர் பணியாலே பழக்கமாக,
எங்களின் அன்புந்தான் இணைந்தது தமிழாலே!

அகவையில் இளையாராகி அன்பிலே பெரியராகி,
முகமன் காட்டும் அன்பில் முறுவலின் சீலரான,
**முகமது சகாபுதீன்** அன்பாலே நிறைந்த கோமான்!
**அகமது மீரானின்** அருந்தவ அண்ணனாவார்!

இகமதில் வாழ்வுதன்னை இடரின்றி முடித்து,
இறையவன் அன்பில்தோய இனிதே புறப்பட்டார்!
அன்னவர் பணியிங்கு அளித்தது போதுமென்றே,
அன்னவன் இறைவன் தானும் அழைத்தான் போலும்!

தென்னகம் சூடிய அன்பில் திகழ்ந்த கோமான்!
அன்னவர் பணியினூடே ஆன்ற அன்பில் நிறைவேன்!
சின்னதாய்ப் பலவும் பேசி சிரித்தே மகிழ்ந்திருப்போம்!
அன்னவர் இல்லக்கிழத்தி அருகூரின் மகளாவார்!

ஆதலால் தம்பிதானும் அண்ணனைச் சுட்டும் போது,
இதமாய்க் கூறிமகிழ்வார் எங்களூர் மாப்பிள்ளையென்றே!
அதுவுமோர்க் காரணமோ எங்கள் அன்பின் தூவலுக்கு?
எதுவோ இன்றவரை இறைவன் அழைத்துக் கொண்டான்!

**உடன்குடி**யே அவர்பிறந்த நல்லூராம்! தாமிரபரணி,
படிதொட்டு முகவையில் முகிழும்வரை தமிழ்மணக்கும்!
அவர்காண்பார் இறையவனை அல்லா வென்றே!
அடியேனுக்கு அவனே கண்ணன் ஆவான்!

கொண்டதாம் எங்கள் நல்நட்பின் பயணம்,
கால் நூறாண்டு தனைக்கூடகடக்க வில்லை!
கடவுளும் அவரை அழைத்துக் கொண்டார்!
இடரில்லா இன்முகத்தின் இனிய தோழன்!

சுடர்விட்டு இறைவழியில் நிறைதல் வேண்டும்!
மடவாரும் முன்னம் மறைந்ததினால் மண்ணில்,
மகனுக்குத் தனிமையில்லை இணையும் உண்டு!
இகத்தில் சீர்சித்தப்பாக்கள் இனிமை செய்ய,

முகமதுசீர் மகனாக அவன் முகிழ்தல் வேண்டும்!
**முகமது சகாபுதீன்** முடிவிலா அன்புத் தோழன்!
அகமது நிறையும் வகையில் அன்புடைசொல்வேந்தன்!
இகமதில் வாழ்வை நீத்தார் இறைவன் கட்டளையாக!

இனியராம் அன்பின் நினைவு யாவருக்கும்,
மணியென மனத்தில் தேங்கக் காண்போம்!
அணியாக அன்னலின் அன்பை யாவரும்,
நனியாக மகிழ்ந்தே சொல்லி நிறைவோம்!

- நினைவில் நெகிழ்ந்த அன்புடன்,
**கு.ப. அசோகன், சென்னை-600 073**
**27-11-2022**